ஆதி திராவிடர் நல மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் தேர்ச்சி விகிதம்

* வினா எண் 380—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆதிதிராவிட நலத்துறை மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் தேர்ச்சி சதவிகிதம் குறைந்து காணப்படுவதை தவிர்க்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா ?

(ஆ) தேர்ச்சி சதவிகிதத்தை அதிகரிக்க தனி வகுப்பு பயிற்சிகள் அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆதிதிராவிடர் மற்றும் பழங் குடியினர் நல மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் தேர்ச்சி விகிதம் குறைந்து காணப்படுவதைத் தவிர்க்க என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பதை விளக்கி எல்லா தலைமை ஆசிரியர்களுக்கும் 17—8—1981 அன்று இயக்குநர் தக்க அறிவுரைகள் வழங்கியுள்ளார்.

(ஆ) பாடங்களைக் குறிப்பிட்ட காலத்திற்குள் முடித்தல், எல்லாப் பாடங்களிலும் வார மாதாந்திரத் தேர்வுகள் நடத்துதல், தனிப் பயிற்சி வகுப்புகள் நடத்துதல், காலாண்டு அரையாண்டு தேர்வுகளில் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்களைச் சீராய்வு செய்து, பொதுத் தேர்வில் அதிக மதிப் பெண்களைப் பெறும் வகையில் உரிய முயற்சி மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகள் எடுக்குமாறு தலைமையாசிரியர்கள் அறிவுறுத்தப்பட்டிருக் கின்றனர். தலைமை ஆசிரியர்கள் இவற்றைச் சரிவரப் பின்பற்றுகிறார்களா என்பதைக் கண்காணிக்குமாறு மாவட்ட ஆதிதிராவிடர் நல அதிகாரிகளுக்கும் உத்திரவிடப்பட்டுள்ளது.

திரு. மா. சுப்பிரமணியன் : துணைத் தலைவரவர்களே, ஆதி திராவிடர் நலத்துறையின் மேல்நிலைப் பள்ளியின் தேர்வு சதவீதம் குறைவாக இருக் கின்றது என்றால் அதற்குக் காரணம் அப்பள்ளியின் தலைமையாசிரியரின் நிர் வாகக் குறைபாடுதான் என்ற முறையிலே அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா ? அப்படி என்றால் எந்தத் தலைமை ஆசிரியர் மீதாவது இது வரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா ? அப்படி இல்லை என்றால் அவ் வாறு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

1982 மார்ச் 5]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, ஏற்கெனவே நான் அளித்த விடையிலேயே இதற்கெல்லாம் விளக்கமாகப் பதில் அளித்து இருக்கிறேன். இருந்தாலும் மீண்டும் சொல்கிறேன். குறைவான தேர்ச்சி ஏற்பட்டதற்குக் காரணமான தலைமை மற்றும் உதவி ஆசிரியர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி ஆதி திராவிடர் நல அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப் பட்டிருக்கின்றது.

திரு. மா. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, ஆதி திராவிடர் நலத்துறை மேல்நிலைப் பள்ளியிலே படிக்கும் மாணவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் என்ற அடிப்படையிலே அரசு அவர்களுக்கு உதவி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு வேலை வாய்ப்புக்களை அளிப்பதில் அரசைப் பொறுத்தவரையிலே பல்வேறு சலுகைகளைக் கொடுத்து வருகின்றது. ஆனால் ஆதி திராவிடர் நலத்துறையின் மேல்நிலைப் பள்ளியிலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு என்று தனியாக வேலைக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய சூழ்நிலை தற்போது இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, இந்த ஆண்டு கல்வித்துறையில் மாணவர்களின் தேர்ச்சி 30 சதவீதம்தான் என்று அறிக்கையிலே சொல்லப் பட்டு இருக்கின்றது. அவர்களிலே ஆதி திராவிட மாணவர்களின் விழுக்காடு எத்தனை ? அதோடு ஆதி திராவிட மாணவர்களுக்கு ட்யூஷன் வைத்துக் கொள்வதற்காக தற்போது தனித் தொகை ஒதுக்கிக் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் அதுபற்றி பிறப்பிக்கப்படுகின்ற உத்தரவுகளை தலைமை ஆசிரியரே வைத்துக் கொண்டு அதைச் செயல்படுத்தாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே அம்மாதிரி உத்தரவுகள் போடுகின்றபோது அந்தத் தகவலை மாணவர்களுக்கும் தெரிவிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : ஆதித் திராவிட நலத்துறையைப் பொறுத்தவரையில் 7 மேல்நிலைப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. கன்னிகாபுரத்திலே இருக்கக்கூடிய மேல்நிலைப் பள்ளியில்—1980-81 வரையில் 84 சதவீதம் தேர்வு அடைந்திருக்கிறார்கள். அரிசனர் நந்தனார் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 60 சதவீதம் தேர்ச்சி சதவீதமாகும். அரிசனர் நந்தனார் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 35 சதவீதம் தேர்ச்சி சதவீதமாகும் ; வாழவந்திநாடு மேல்நிலைப் பள்ளியில் 41 சதவீதம் தேர்ச்சி சதவீதமாகும், நெல்லை மாவட்டத்தில் இருக்கக்கூடிய நல்லம்மாள்புரம் மேல்நிலைப் பள்ளியில் 15 சதவீதம் தேர்ச்சி சதவீதமாகும். பேச்சிப் பாறையிலுள்ள பழங்குடி

யினர் உறைவிட மேல்நிலைப் பள்ளியில் 95 சதவீதம் தேர்ச்சி சதவீதமாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னதைப்போன்ற பயிற்சி வகுப்புகள் தற்போது மேல்நிலைப் பள்ளிகூடங்களுக்கு மட்டுமின்றி, உயர் நிலைப் பள்ளிக்கூடங்களுக்கும் நடத்தப்படுகிறது. அது தொடர்ந்து செயல் படுத்தப்படும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, ஆதித் திராவிடர்களுடைய மதம் மாற்றம் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் சில விவரங்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். நாங்கள் கேட்டுக் கொள்வதெல்லாம்—சமீபத்திலே கூட வட ஆற்காடு மாவட்டத்தில் என்று நினைக்கிறேன் 22 குடும்பங்கள் ஊர் ஊராகப் போய் ஊர்வலம் வந்து, மந்திரி யையும் சந்தித்து பேசியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். ஆனால் பிரச்னைகள் வருகிறபோது, சுடுகாட்டுக்குப் போக பாதை கொடுப்பதில்லை, குடிதண்ணீர் பிரச்னை போன்றவைகள் எல்லாம் வருகிறபோது கோர்ட்டுக்குப் போய் ஸ்டே ஆர்டர் வாங்கி விடுகிறார்கள். இவைகளையெல்லாம் தடுக்கிற வகையில் சட்டத்தை திருத்தியாவது சிறந்த முறையில் நடவடிக்கை எடுக்க அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆதித் திராவிடர் நலத் துறை மாணவர்களின் மத்தியில் அவர்களின் தேர்வு சதவீதம் குறைந்திருந்தாலும், அல்லது அவர்களுடைய மார்க் வீதம் குறைந்திருந்தாலும், அவர்களை ஊக்குவிக்கின்ற முறையில், மதிப்பு எண் களை அதிகமாகப் பெற்றவர்களுக்கு, இன்சென்டிவ் போனஸ் என்று சொல்வார் களே அந்த முறையில் ஊக்கத் தொகை வழங்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மட்டும் இன்றி, ஆதித்திராவிட நலத்துறையின் கீழ் இயங்குகின்ற உயர்நிலைப் பள்ளிகளிலும் கூட, 10-வது வகுப்பு பாஸ் செய்கிறவர்களில் 60 சதவீதத்திற்கு மேல் மார்க் வாங்கியிருப்பவர்களுக்கும், அதேபோல பிளஸ் 2 மாணவர்களில் 60 க்கும் மேற்பட்ட மார்க்குகள் வாங்குகிற மாணவர்களுக்கும், ரூபாய் 300 உதவித் தொகை அளிக்கின்ற ஒரு திட்டத்தை அரசு எற்கெனவே செயல்படுத்தி வரு கிறது. இதனை அரசு தொடர்ந்து செயல்படுத்தும்.

1982 மார்ச் 5]

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்படி குறைந்த சதவீத அளவிலே மார்க் அவர்கள் வாங்குவதற்கான காரணங்களில், அவர்கள் விடுதியிலே வந்து தங்கி படிக்க இயலாத நிலை இருப்பதும் ஒரு காரணமாகும். ஆகவே அரசு எல்லோருக்கும் பயன்படுகிற அளவுக்கு விடுதிகளை ஏற்படுத்த முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : ஏற்கெனவே தமிழகத்தில் பல்வேறு இடங்களில் ஆங்காங்கே இருக்கக்கூடிய தனியார் கட்டிடங்களிலும், அரசின் சொந்தக் கட்டிடங்களிலும் விடுதிகள் ஏற்படுத்தப்பட்டு, அதில் மாணவர்கள் சேர்ந்து பயன் அடைந்து வருகிறார்கள். அரசு இவைகளைப் பார்த்து, எங்கெங்கே விடுதிக் கட்டிடங்களை இன்னும் அதிகமாக சொந்தத்தில் கட்ட முடியும் என்று பார்த்து, அதற்கான வாய்ப்பினை கண்டு ஆராய்ந்து செய்து வருகிறது. ஆகவே, அத்தகைய சலுகைகளை இந்த இனத்தைச் சேர்ந்த மாணவர்கள் தொடர்ந்து பயன்படுத்திக் கொள்ளலாம்.

திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பத்தாம் வகுப்பில் 60 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண்கள் வாங்கிய ஆதி திராவிட மாணவர்களுக்கு 300 ரூபாய் உதவித் தொகையாக கொடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் மேல்படிப்புக்குச் சேர்ந்து, அந்தப் படிப்பை அவர்கள் படிக்கின்ற நேரத்திலும், அந்தத் தொகையைத் தொடர்ந்து தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எடுத்துச் சொன்ன அந்த உதவித் தொகையானது, அந்த மாணவர்கள் எந்த மேல்படிப்புக்காக சென்றாலும் கூட, அந்தப் படிப்பை அவர்கள் முடிக்கின்ற வரையிலே தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகிறது. அதைத் தொடர்ந்து அரசு செயல்படுத்தும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]